Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. 4. } 1913வரு ஜூலைமீ 15உ பிரமாதீசவரு ஆனிமீ 32உ { பகுதி 3.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

1. ஸ்ரீமான் லெட்பீடரின் சரித்திரம்—ப. நாராயண ஐயர். 79
Life of Mr. Leadbeater—P. Narayana Iyer.

2. மரணபயம் வேண்டாம்—ப. நாராயண ஐயர். 84
Fear not death—P. Narayana Iyer.

3. அஹல்யா சாப விமோசநம்—R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A. 90
Curse of Ahalya discharged—R. Srinivasa Iyer M. A.

4. பிரஹ்மக்ஞானதர்சநம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் 95
Elements of Theosophy—V. Vengusamy Iyer.

5. ஸங்க்ராந்தி அல்லது உத்தராயணம், ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர் 98
Winter Solstice—R. S. Narayanasamy Iyer.

6. திருமந்திர ஆராய்ச்சி—மாதவன் 102
Some researches in Tirumantra—Madhavan.

7. துகாராம் பாவாவின் சரித்திரம்—A. சிவராவ். 106
Life of Tukaram Baba—A. Siva Rao.

8. சமாசாரம்—பத்திராதிபர். 109
News—Editor.

9. உதாஸீநஸாது ஸ்தோத்ரம்—ஆர். சுந்தரராஜ ஐயர்.
Udasina Sadhoo Stotram—R. Soondararaja Iyer.

ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச்சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இது டெம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக்கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர் செய்துகொள்ளுங்கள்.

சந்தா விவரம்.

12 ஸஞ்சிகைக்கு முன்பணமாக வி. பி. சார்ஜ் உள்பட — ரூ. 2—12—0

சந்தாதார்களின் சௌகரியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா — ரூ. 1—7—0

Apply to—மானேஜர், 'பக்தமாலா' ஆபீஸ்,
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

85

Supplement to the "Poornachandrodayam."



Mr. C. W. Leadbeater.

Vaidya Bros.' Press Bombay.

87

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. 1913௵ ஜூலை௴ 15உ பிரமாதீச௵ ஆனி௴ 32உ பகுதி 3.

ஸ்ரீமான் சார்ல்ஸ் லெட்பீடர் என்பவரின் சரித்திரம்.

பிரகிருதத்தில் பிரஹ்மக்ஞான ஸபையில் மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மை அவர்களுக்கடுத்து உலகமுழுமையும் பிரஸித்திபெற்று இருக்கிறவர் ஸ்ரீமான் லெட்பீடர் என்பாராவர். குப்தசாஸ்திரத்தில் நுண்ணிய ரஹஸ்யமான தத்துவங்களை யாவருக்கும் புலப்படும்படியாய்த் தெளிவாய்ப் பல புத்தகங்கள் மூலமாய் இவர் வெளியிட்டிருக்கின்றனர். எத்தனையோ மயக்கமாயும் இருட்டாயுமுள்ள அநேக ஞானவிஷயங்களைத் தம்முடைய அகன்ற ஆழ்ந்த ஆராய்ச்சியின்மேல் பிரகாசிப்பித்திருக்கின்றனர். தைர்யமாய் புவர் லோகம், ஸ்வர்க்கலோகம் என்ற பிரக்ஞாபூமிகளில் போக்குவரத்து உள்ளவர். அவர் புத்தகங்களை நன்றாய்ப் படித்தோமானால் அறிவின்மையால் மஹாபயங்கரமானதாக நாம் நினைக்கும் மரணம் ஜாக்கிராவஸ்தையிலிருந்து ஸுஷுப்தி அவஸ்தைக்குப் போகின்றது போலாமென உணர்வோம். இப்புண்ணியரால் வெளிவந்திருக்கிற புத்தகங்கள் உலகத்தில் மநச்சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும் எத்தனையோ மனிதர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் மேன்மேலும் விளைவித்துக்கொண்டுவருகின்றன. இவர் காமத்தையும் கோபத்தையும் ஜயித்தவர், திவ்யதிருஷ்டி பெற்றவர். அதனால் அவர் சொல்லும் வார்த்தைகளெல்லாம் அவர் பல பிரக்ஞாபூமிகளில் நடைபெறுவதனால் அவர் நேரில் அநுபவித்த விஷயங்களாம்.

"முகத்திற் கண்கொண்டு பார்க்கும் மூடர்காள், அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்ற உண்மையை அவரை தரிசிக்கும் ஒவ்வொருவனும் அவரது முகமலர்ச்சியால் அறிவான். உலகத்தாரின் புகழ்ச்சியும், உலகத்தாரின் இகழ்ச்சியும் திரையற்ற கடல்போலிருக்கும் அவர் சிந்தையை எவ்விதத்திலும் பேதிக்கா.

> 𑌪𑌰𑌾𑌞𑍍𑌚𑌿 𑌖𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌤𑍃𑌣𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌃
> 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍍।
> 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌐𑌕𑍍𑌷𑌦𑍍
> 𑌆𑌵𑍃𑌤𑍍𑌤𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍॥

இதன்பொருள்:-பரமேசுவரன் இந்த்ரியங்களை வெளிநோக்காய் ஸ்ருஷ்டித்தார். அதனால் புருஷனான ஜீவன் வெளிநோக்கினவனாய்ப் பிரவிர்த்திக்கிறான். அந்தராத்மாவைப் பார்க்கிறானில்லை. யாரேனும் ஒரு விவேகியான தீரன், மோக்ஷத்தை இச்சிக்கிறவனாய் உலக விஷயங்களினின்று இந்திரியங்களைத்திருப்பி அந்தர்முகப்பட்டு ஆத்மாவைப் பார்க்கிறான்.

இம்மந்த்ரத்தில் சூசிப்பிக்கப்படும் தீரனை இக்காலத்தில் கண்கூடாய்ப் பார்க்கவேண்டுமானால் அதற்கு இவரே திருஷ்டாந்தமாவர். பெரியாரின் இயல்பைப்பற்றிய அடியில் வரும் புறநானூறு வசநம் முற்றும் இவர்க்கே பொருந்தும்:—

> "யாதும் ஊரே, யாவரும் கேளிர்
> தீதும் நன்றும் பிறர்தர வாரா.
> நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன.
> சாதலும் புதுவதன்றே. வாழ்தல்
> இனிதென மகிழ்ந்தன்றும் இலமே. முனிவின்
> இன்னா தென்றலும் இலமே. மின்னொடு
> வானம் தண்டுளி தலைஇ யானாது
> கால்பொரு திரங்கு மல்லல் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறலோர்
> காட்சியிற் றெளிந்தனம். ஆகலின் மாட்சியிற்
> பெரியோரை வியத்தலும் இலமே.
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."

இப்போது இவருக்கு வயது 66. 1847ஞு பிப்ரவரிமீ 17உ யில் பிரகிருத ஜன்மம் எடுத்தார். வயது 66 ஆகியும் கொஞ்சமே னும் தளராமல் வேலைசெய்கின்றார். சரீரப்பயிற்சிக்கு அநுகூல மான விளையாட்டுகளை வாலிபரைப்போல் இப்போதும் விளையாடுகி ரார். மநம், மெய், மொழிகளைப் பூர்ணமாக ஸ்வாதீநத்தில் வைத் திருக்கின்றார். பூர்வ ஜன்மங்களில் எத்தனையோ மஹா புருஷர்க ளின் சிநேகமும் அவர்களுக்குக் கைங்கர்யமும் அதனால் பெற்ற ஞாநஸம்பத்தும் பிரகிருத ஜன்மத்தில் நல்ல பயனை அளித்திருக் கின்றன என்பது ஒரு முறை அவருடன் சம்பாஷணை செய்தவரு க்கு நன்கு புலப்படும். பொறாமையாலும் ஈர்ஷ்யையாலும், பிறர் சுகத்தைக்கண்டு சகிக்காத குடில மநத்தினாலும் சிலர் இவரைப் பற்றிப் பொய்யான அவதூறுகள் சொல்லுவார்கள், பொய்யான அபவாதங்களை இவர் மேல் ஆரோபிப்பார்கள். அவர்கள் அடியில் வரும் பாசுரத்துக்கு லக்ஷியமாவார்கள்.

"பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கிடச் சிதைவுகள் செய்பவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே"—திருமந்திரம்.

குழந்தையாயிருக்குங்காலத்தில் இவர் பெற்றோருடன் தென் அமெரிக்காவுக்குச் சென்றார். அநேக அற்புதமான சம்பவங்களின் மத்தியில் தம் வாழ்நாளைக் கழித்தார். பின்பு இங்கிலாந்து தேசத் திற்குத் திரும்பினார். ஆக்ஸ்பர்டு கலாசாலையில் சேர்ந்து படித்தார். ஒரு வியாபாரக் கம்பெனியில் போட்டிருந்த தம்முடைய பணம், கம்பெனி மூழ்கவே போய்விட்டது. அதனால் வித்தியார்த்தியாக இருக்கவேண்டியகாலம் பூர்த்தியாக நடத்தமுடியாமற் போயிற்று. இக்கஷ்டம் வந்தாலும் 1878ஞுத்தில் (Church of England) பாதிரிகளில் ஒருவராக அமர்ந்தார். 1884ஞு வரையில் அவ்வுத்தி யோகத்திலேயே இருந்தார். ஸ்ரீமான் ஸிந்நெட் (Sinnet) என்ப வரால் பிரஹ்மஞாந ஸபையைப்பற்றிப் பிரஸித்தம் செய்யப்பட் டிருந்த புத்தகங்களைப் படித்தார். அவருடன் சிநேகம் கொண் டார். 1884ஞுத்தில் பிரஹ்மஞாந ஸபையின் அங்கத்தினரா னார். ஸ்ரீமான் லெட்பீடர் என்பார் ஒரு காரியத்தில் புகுந்தால்

அதில் முழுமநத்தையும் வைக்கும் ஸ்வபாவமுடையவர். துனிப் புல்லே மேயும் தன்மையர் அல்லர். தான் நடத்திவந்த உத்தியோகத்தை முற்றும் துறந்துவிட்டார். மாதுஸ்ரீ ஹேலினாம்பாள் அம்மையை குப்தஞானக்களஞ்சியமென அறிந்துகொண்டார். பிறகு அவருடன் இந்தியாவிற்குப் புறப்படலாயினர். வழியில் ஏகிப்து தேசத்தில் இருவரும் தங்கினர்கள். இருவரும் தனியாக இருக்கும் காலத்தில், ஒரு மஹாத்மா திடீரெனத்தோன்றினர். இவர் திடுக்கிட்டு நடுங்கினர். இவரை நிந்தனையாக "ஸந்மார்க்க முறையில் பிரவேசிக்கிறவரின் தீரத்தன்மை இவ்வளவுதானே" வென்று அம்மையார் இடித்துச்சொன்னர். இச்சம்பவத்திற்குப் பின்னர் இத்தன்மையான சம்பவங்களில் நடுங்கும் நடுக்கத்தை விட்டார். அம்மையின் சிஷ்யராக, இட்டவேலையைச் செய்வதற்கு ஆயத்தமுள்ளவராக சுசுரூஷைசெய்துகொண்டு வந்தார். நாளடைவில் அவர் குருநாதன் அவருக்குத்தோன்றினர். அக்குருநாதன் அதுமுதல் கையைக்கொடுத்து ஆதரவாய் அவரை நடத்திவருகின்றார். பல ஜந்மங்களில் புரிந்த கைங்கர்யத்தின் பலனைத் தம்முடைய குருநாதனின் சிஷ்யர்களில் உயர்நலமமைந்தவரும் நன்னம்பிக்கையுள்ளவருமான சிஷ்யராக இப்போது விளங்குகிறார். பிரஹ்மஸாக்ஷாத்காரம் பெறும் வாயிலில் தீரராக நிற்கின்றார். பிரஹ்மக்ஞான ஸபையை ஸ்தாபித்த மஹரிஷிகள் இருவரில் K. H. என்று பிரஸித்தம் பெற்ற மஹாத்மா, இவருடைய குருநாதன் ஆவர். 1885ஹூத்தில் ஸ்ரீமான் தாமோதரருடைய ஸ்தானத்தை அதாவது பிரஹ்மக்ஞான ஸபையில் Recording Secretary என்ற உத்தியோகத்தை வஹித்தார். ஸபையின் பிரஸிடெண்டு கர்னல் ஆல்காட் அவர்களுடன் பர்மா தேசத்திற்குச் சென்று பிரஹ்மக்ஞான ஸபையின் கிளைகளை அத்தேசத்தில் நாட்டினர். 1886ஹூத்தில் இலங்கை (Ceylon) தீவுக்குப்போனர். பௌத்தர்களின் கல்வி யபிவிருத்தியைப்பற்றி ஏராளமான முயற்சி எடுத்துக்கொண்டார். ஆநந்தா கல்லூரியை (Ananda College) ஸ்தாபித்த விஷயத்தில் இவருடைய முயற்சி மிகவும் மெச்சத்தக்கது. 1889ஹூ வரையில் இவ்விதம் வேலை செய்தார். பின்னர் ஐரோப்பாவுக்குச் சென்றார். பின்பு ஒவ்வொரு வருஷமும் இந்தியாவில் 3மீ காலமும் மற்றைக்

காலத்தை இலங்கைத் தீவிலும் ஸபைக்காக உழைத்து வந்தார். பின்பு இங்கிலாந்து தேசத்தில் 1899ஆம் வரை இருந்தனர். லண்டன் (London) நகரிலுள்ள பிரஹ்மக்ஞாந ஸபையின் அங்கத்தினராக விருந்து புவர்லோக சம்பந்தமான சில ஆராய்ச்சிகள் செய்தார். அதன்பயனாக புவர்லோகரஹஸ்யம் (Astral Plane) என்ற புத்தகத்தை வெளியிட்டார். 1896ஆம் முதல் 1906ஆம் வரையில் பல நகர்கள் சென்று பிரஹ்மக்ஞாந ஸபை சம்பந்தமான உபந்யாஸங்கள் செய்துவந்தார். கல்வி கற்பிக்கும் முறையில் மஹா நிபுணர். ஞாந விஷய ஸம்பந்தமான புத்தகங்களை ஏராளமாக இவர் எழுதிப்பிரஸித்தம் செய்திருக்கின்றார்.

1906ஆம்த்தில் இவர்மேல் அக்கிரமமான ஒரு அபவாதத்தைச் சிலர் கற்பித்தனர். அதனால் ஸபையைவிட்டுத் தாமே நீங்கிக் கொண்டார். உண்மையில்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒருவனுக்கு உதவிசெய்து கைதூக்கிவிட்டுக் காப்பாற்றிய இவரை வாய்கூசாமல் அவர் பெரிய அக்கிரமமான உபதேசம் செய்தனரென சில அக்கிரமஸ்தர்கள் பழிசாற்றினர். ஸபையின் க்ஷேமத்தை நோக்கித் தம்மால் ஸபைக்கு ஒருவிதத் தீங்கும் வாராமல் தடுக்கும் பொருட்டு தாமே பிரஹ்மக்ஞாந ஸபையினின்று விலகிக்கொண்டார். பின்பு 1907ஆம்த்தில் அவர்மேல் சுமத்திய பழி அக்கிரமமானதென்றும், பொய்யானதென்றும் ஸபையின் முக்கியஸ்தர்களுக்கு வெளிவந்தமேல் ஸபையில் இவரைத் திரும்பவும் சேரும்படியாகச் செய்ய பல முயற்சிகள் நிகழ்ந்தன. 1909ஆம் பிப்பிரவரிமீ ஆதியாற்றில் வஸிக்கவந்தார். பின்பு ஸபையில் அங்கத்தினராகத் திரும்ப ஆயினர். அது முதல் புவர்லோக ஸ்வர்க்கலோக விஷயங்களில் இவர் செய்துகொண்டுவரும் ஆராய்ச்சி மிகவும் அற்புதமானது. அவ்வாராய்ச்சி விஷயங்களை அநேக புத்தகங்களில் ஜநோபஹாரமாக பிரஸித்தம் செய்திருக்கின்றனர். இத்தகைய புண்ணியர் நீடூழி வாழ்ந்து இன்னும் ஞாநவிஷயங்களை உலகத்துக்கு அளிப்பாராக. இவருடைய படம் இந்தப் பத்திரிகையின் முகப்பில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஓம் தத் ஸத்.

ப. நாராயண ஐயர்.

மரண பயம் வேண்டாம். *

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்; நமனில்லை நாணுமே
சென்றே புகும் கதியில்லை நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே"—திருமந்திரம்.

என் சிநேகிதனே!

1. சமீபத்தில் உன்னுடைய அன்பார்ந்த உறவினர் அல்லது சிநேகிதர் மரணமாயினர். அவர்பால் நீ அதிக வாஞ்சை வைத்திருந்தாய். உன்னுலகமெல்லாம் அவரிடம் நிரம்பியிருந்தது. அவர் இறந்துபோய்விட்டார். அதனால் உலகமே போய்விட்டதாக நினைக்கிறாய். உலகம் அஸ்தமநமாகிவிட்டது, இனி உலகில் ஜீவிக்க வேண்டுவது அநாவசியமென்று உனக்குத் தோன்றிடும். அவரின்மையால் எல்லாம் வெறுமையாகத் தோன்றிடும். சந்தோஷம் உன்னைவிட்டு முற்றும் அகன்றுவிட்டதென நினைப்பாய். இனி உலக வாழ்வு துக்கமென்றே மதிப்பாய். அவரைக் காண்பேனோ, அவர் வசநத்தைக் கேட்பேனோ என்று ஏங்கித் தவிப்பாய். அவரின்றி உலகம் விரஸமாகப் போய்விட்டது. இவ்விதமாக, உண்மையில் உன்னைப்பற்றியும் உனக்குண்டாயிருக்கும் நஷ்டத்தைப் பற்றியும் முக்கியமாகச் சிந்திக்கின்றாய். இத்தகைய வியஸநத்துடன் இன்னும் ஒரு வியஸநமும் உண்டு. அதாவது, உன்னுடைய அன்பிற்குரியவர் எங்கே போயிருக்கிறாரோ; அவர் எந்நிலையில் இருக்கிறாரோ; என்ற வியஸநமும் உன்னைப்பாதிக்கிறது. ஓர் ஓர்சமயத்தில் "அவர் சம்பந்தப்பட்டமட்டில் எல்லாம் நன்றாய் நிகழும், நான்தான் துக்கத்துக்குள்ளானேன்" என நீ நினைப்பாய். பின்பு மேல்நோக்குவாய். எல்லாம் வெட்டவெளியாக இருக்கிறதே என வருந்துவாய். அவர் எங்கே என வினவுவாய். அதற்கு விடைஇல்லையே என ஏக்கமுறுவாய். அதனால் ஏக்கமும், பயமும், சந்தேகமும் உன்னைப்பற்றும்; உன்னை அமிழ்த்தும். அஸ்தமிக்காது என்றும் பிரகாசிக்கின்ற சூரியனை (ஆத்மாவை) மருளான மேகம் மறைக்கும்.

---

*"To Those Who Mourn" என்ற சிறு புத்தகம் ஸ்ரீமான் லெட்பீடரவர்களால் சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. பிரகிருதவியாஸம் அதை அநுசரித்து நிகழ்வது.

2. இவ்விதமான உன்னுடைய அநுபவம் இயற்கைதான். இதை நான் நன்றாய் அறிவேன். உன்னைப்போல் வருந்துகிறவர்களைக் கண்டால் என் மநமுருகுகிறது, இளக்கமுறுகிறது. வெறுமையான இரக்கம் மாத்திரம் அல்ல. இந்த விஷயத்தில் ஆறுதலும் தேறுதலும் நான் செய்தல் கூடும். உன்னைப்போல இவ்விதம் வருந்தின அநேகர் ஆறுதலும் தேறுதலும் பெற்றிருக்கிறார்கள். அவ்விதம் நீயும் பெறலாமன்றோ?

3. "ஐயா! எனக்கு ஆறுதல் உண்டோ? எனக்கும் விமோசநமுண்டோ?" என வினவுவாய். உண்டு, உண்மையாக உண்டு. சந்தேகமில்லை, உண்மை அறியாததால், நீ துக்கிக்கிறாய். அதனால்உண்மையை அறிந்தால் துக்கம்போய்விடும். சம்பவிக்காத விஷயத்தைப் பற்றித் துக்கிக்கிறாய். * மரணம் என்பதில் நேரிடும் உண்மையான சம்பவங்களை நீ தெரிந்துகொண்டால் நீ வியஸநப்படமாட்டாய் என்பது நிச்சயம். நீ சொல்லுவாய் "ஐயா! எல்லாம் சரிதான். எனக்கு சுகிர்தமானவர் போய்விட்டார். உம்முடைய உதவி எனக்கு என்ன பலன் கொடுக்கும்? இறந்தவரைத் திரும்பக் கொடுப்பீரா?" உன்னுடைய மநோநிலையை யான் நன்கு அறிவேன். சற்று என் வசனத்தைக் கேள். கொஞ்சம் பொறுமை உள்ளவனாகவிரு. மூன்று முக்கியமான விஷயங்களை உனக்கு நான் சொல்லப் போகிறேன். அவைகளைக் கவனித்துக்கேள். அவைகளை முதலில் பொதுப்படையாகச் சொல்லுவேன். பின்பு அவைகளை விவரிப்பேன்,

(1) உன் அன்புக்குரியாரை இழந்துவிட்டாய் என் நீ நினைக்கிறாய். உன்னபிப்பிராயப்படி கூட அஃது ஒரு தோற்றமே. உண்மை அன்று என்று உணர்வாய். வேறு ஒரு அபிப்பிராயம் சொல்லுகிறேன், கவனிப்பாய். ஸ்வாபாவிகமான பிரபஞ்ச தர்மங்களை அறியாமையால் நீ வருந்துகிறாய். சில பிரபஞ்ச உண்மைகளைச்சொல்லுகிறேன், அவைகளைக் கேள். பின்பு அவைகளை சாவகாசமான வேளையில் நீ ஆராய்ந்துகொள்ளு.

(2) உன் அன்பிற்குரியவர் கதி என்னவாகிவிட்டதோ எனநீ சந்தேகம் கொள்ளவேண்டாம். மரணத்திற்குப்பின் ஜீவனுடையகதி மறைப்புள்ளதன்று. அதைப்பற்றி இக்காலத்தில் தெளிவானஞானம்,

* பகவத்கீதை இரண்டாம் அத்தியாயம்11-ம் சுலோகம் முதல்பார்க்க

ஏற்பட்டுள்ளது. பூலோகத்தில், மரணத்துக்கு முன்னுள்ள ஜீவனின் நிகழ்ச்சி எப்படி வியக்தமாகத் தெரிகிறதோ, எப்படி பிரபஞ்ச தர்மங்களை அநுஸரித்து ஜீவன் நடைபெறுகின்றனோ, அப்படியே, மரணத்துக்குப் பின்னும் ஜீவனுடைய கதி,விதிபற்றியே நிகழுகின்றது. மரணத்திற்குப் பின்னுள்ள கதியைப் பற்றியும் விரிவான நுண்ணிய ஆராய்ச்சி நன்றாய்ச் செய்யப் பெற்றிருக்கிறது.

(3) நீ வியஸநப்படாதே. நீ அழாதே. உன் வியஸநமும் உன் அழுகையும் இறந்தவனுக்குக் கெடுதிசெய்யும். அதன் உண்மை உன் மநத்தில் உதயமானல், நீ அழமாட்டாய்.

4. இவைகள் எல்லாம் வெறுமையான வார்த்தைகள் என நீ நினைப்பாய். அப்படியல்ல. ஏன் நீ வியஸநிக்கிறாய்? உன்னுடையபிரகிருத அபிப்பிராயத்துக்கு என்ன ஆதாரம்? ஏதோ உன்மதசம்பந்தமான சில புஸ்தகங்களில் அவ்விதம் சொல்லியிருக்கிறது, அல்லது உன்னுடைய மதஸம்பிரதாயத்தார் அவ்விதம் அபிப்பிராயப்படுகிறார்கள் அல்லது அவ்விதமாகத் தான் இக்காலத்தியரின் கொள்கை என நீ சொல்லுவாய். இவ்விதமான அபிப்பிராயங்களை நன்றாய்ப் பரிசிலனை செய்தால் அவைகளும் வெறும் வார்த்தைகள்தான் என்றும், அவைகளுக்குப்போதுமான வெளிப்படையான ஆதாரங்கள் இல்லை என்றும் நீ அறிவாய். மதஸம்பிரதாயங்கள் ஒன்றோடொன்று வேறுபடுகின்றன. மதஸம்பந்தமான புஸ்தகங்களோ அவைகளைப்பலவாறாக அர்த்தம் பண்ணுகின்றார்கள். இக்காலத்தியர்கள் அபிப்பிராயப்படுகின்றார்களே என்றாலோ ஆராய்ச்சியின்மேல் உண்மைதெரிந்து அதன்மேல் அவ்வபிப்பிராயம் ஏற்பட்டதாக இல்லை. அதுவும் நிராதாரமுள்ள அபிப்பிராயமாம். மரண சம்பந்தமான இவ்விஷயம் நாம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது. "அவர் சொல்லுகிறார். அப்புஸ்தகம் சொல்லுகிறது. பொதுப்படையாய் அவ்விதமான அபிப்பிராயம் நிகழ்கிறது," என நம்பி நாம் மோசம் போகிறோம். வீணை பயம் கொள்ளுகிறோம். சாஸ்திர ரீதியாக இதை ஆராயவேண்டும். அப்போதுதான் உண்மை வெளிப்படும். அவ்விதம் ஆராய்ச்சியும் பரிசிலனையும் இக்காலத்தில் சிலரால் நடத்தப்பட்டு இருக்கின்றது. அத்தகைய ஆராய்ச்சியின் சித்தாந்தத்தைத் தான் அடியில் விவரிக்கப் போகிறேன். இது வெறுமையாக, மநம்

போனபடி நினைத்த நினைப்பன்று. இதை நான் நன்றாய் நேரில் உண்மையென அறிவேன். அதை நீயும் நன்றாய் ஆராய்ந்து அறிந்து கொள்ளு. கண்மூடிக்கொண்டு அதை நம்பு என்று நான் சொல்லவில்லை.

5. முன்சொன்ன மூன்று விஷயங்களை இப்போது ஒன்றின்பின் ஒன்றாய் ஆராய்வோம். முதன்மையில் மனிதனின் சரீரங்களின் அமைப்பைப்பற்றி சற்று விசாரிப்போம். மனிதனிடத்தில் ஆத்மா என்பது இருக்கிறதாக நீ கேள்விப்பட்டிருக்கலாம். "என்னுடைய ஆத்மா" என்று சொல்லுதல் தவறு. "நான் ஆத்மா என்று அறிவேன்." என்று சொல்லு. இதுதான் உண்மை. மனிதன் என்றால் ஆத்மா; ஆத்மா உடலை உடையவனாயிருக்கிறான். உடல் மனிதன் அன்று. அது அவனுடைய உடை, வஸ்திரம். மரணம் என்பது ஜீர்ணமானபழையவஸ்திரத்தைக் கழித்தலாம். நீ போட்டிருக்கும் ஆடையைக்கழித்துவிட்டால், நீ போய்விடுகிறாயா? உனக்கு யாதொரு கேடும்சம்பவிக்கிறதில்லை. அதுபோலவே பிரகிருகித உடல் போனால், மனிதனுக்கு யாதொரு கேடும் சம்பவிக்கவில்லை.

இதை ஸ்ரீமத் பகவத்கீதையில் அடியில் வருமாறு உபதேசித்துள்ளது:—

வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய
நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி।
ததா ஶரீராணி விஹாய ஜீர்ணா
ந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ॥

(இ-ள்) எப்படி ஒரு மனிதன் பழைய ஆடைகளைக்கழித்து வேறு புதிய ஆடைகளை எடுத்துக்கொள்கின்றானோ, அப்படியே, தேகியானஜீவன் பழைய உடல்களைக் கழித்து வேறு புதிய உடல்களை அடைகின்றான்.

அதனால் உன் அன்பிற்குரிய சிநேகிதனை மரணத்தால் நீ இழக்கவில்லை. வழக்கமாய் ஒரு ஆடையுடன் பார்த்தாய். இப்போது அந்த ஆடை, அந்த உடல் சிதைந்து போயிற்று. ஆனால் அதை அணிந்த மனிதன் இன்னும் இருக்கிறான். அவன் போகவில்லை. அவனை நேசிக்கிறாய். அவன்பால் நீ அன்புபாராட்டுகிறாய். அவனுடைய வெளி வஸ்திரமாகிய வெளி உடலை நேசித்தாய் இல்லை. அவனை இராமன், கேசவன் என்று அழைப்பாய். உயிர் அதாவது ஆத்மா உடலைவிட்டு நீங்கியதின்மேல், அவ்வுடலை பிணம் என்று பெயரிட்டு அழைக்கிறாய். இராமன், கேசவன் என்ற பெயரை அப்பிணத்திற்கு உபயோகிக்கிறாயில்லை.

6. உன் சிநேகிதனுடைய பிரகிருத நிலைமையை நீ அறியு
முன், உன்னை இன்னான், இத்தன்மையன் என்று முதலில் நீ அறிய
வேண்டும். நீ நித்தியன், உண்மையில், நீ ஈசுவர அம்சன். ஈசுவரன் என்ற
பெருஞ்சுடரினின்று உண்டான ஒரு பொறி* நீ. பிரகிருத சரீரத்
தை எடுக்குமுன் எத்தனையோ யுகங்கள் நீ இருந்திருக்கிறாய். இந்தச்
சரீரம் போன பின்பு நீ எத்தனையோ யுகங்கள் இருக்கப்போகின்
றாய்.

நத்வேவாஹம்ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா:।

நசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்॥

(இ-ள்) நானும், நீயும், இந்த அரசர்களும் ஒரு பொழுதும் இல்லாதிரு
ந்ததில்லை. இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமற் போவது மில்லை.

இந்த வசநம் உத்தேசமாகச் சொன்னதின்று. நன்னம்பிக்கை
உண்டாவதற்காக ஏற்பட்டதன்று. இது யதார்த்தமானது. இது
ஸத்தியம். பரீக்ஷையினால் இதை ஸ்தாபிக்கலாம். இதைப்பற்றி ஏரா
ளமான இலக்கியங்கள் இருக்கின்றன.† நீ இப்போது உன்னுடைய
ஜீவகாலம் என்று நினைக்கிற காலமான ஒரு ஜன்மம் ஆத்மாவின்
உண்மையான ஜீவகாலத்தின் ஒரு நாள் என்று அறி. அப்படியே
உன் அன்பிற்குரிய சிநேகிதரின் சென்றுபோன ஜீவகாலமுமாம்.
ஆகையால், உண்மையில் அவன் மரணமாகவில்லை. அவன் ஆடை
யாக அணிந்த சரீரத்தைக் கழற்றி எறிந்துவிட்டான்.

7. இதனால் யாதொரு சரீரமுமில்லாமல் இருக்கிறான் என
நினையாதே. பால் என்ற ஞானியார் சொல்லியபடி, "ஆத்மாவிற்கு
இயற்கையான ஸ்தூல உடல் ஒன்று உண்டு; ஸூக்ஷ்மமான உடலும்

---

*முதல் முண்டகம்-2-ம் கண்டம்-1-மந்திரம்-இங்கு கவனிக்கத் தக்கது.

†பகவத்கீதை, உபநிஷத்துக்கள், ஞானவாஸிஷ்டம் முதலியன.

The Other Side of Death by C. W. L.
The Astral Plane by do
The Devachanic plane by do
Death and After by A. B.
The Inner Life Vol. II by C. W. L.
The Life after Death by do
Dreams by do
Reincarnation by A. B.
Professor Myer's Human Personality
Ghost Stories by W. T. Stead.
After Death : What. by Profr. Lombroso.

இவை போன்ற புஸ்தகங்கள் இன்னும் அநேகம் ஆங்கிலத்திலுள்ளன.
இதைப்பற்றி நம்மவர்களுக்கு ஸந்தேஹமில்லையாதலால், நம் தேசபாஷைக
ளில இத்தன்மையான புத்தகங்களில்லை.

உண்டு." இதை ஜநங்கள் தப்பாய் கிரஹித்திருக்கிறார்கள். இந்த உடல்கள், சரீரங்கள், ஒரேகாலத்தில் நமக்கில்லையென்றும், ஒன்றின் பின் ஒன்றாய்த் தோன்றுகின்றனவென்றும் நினைக்கிறார்கள். இது சரியன்று. இச்சரீரங்கள் இப்பொழுதுநமக்கு இருக்கின்றன. ஆனால் ஸூக்ஷ்ம சரீரம் ஊனக் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஸ்தூலசரீரத்தை மரணகாலத்தில் கழற்றிப் போட்டாலும் ஸூக்ஷ்ம சரீரத்தை ஆத்மா வைத்துக்கொண்டிருக்கிறான்.

8. ஸ்தூல சரீரமாகிய வெளி அங்கியை மரணகாலத்தில் மாத்திரம் கழற்றிப்போடுகிறாய் என நினைக்கவேண்டாம். ஒவ்வொரு தினமும் இராத்திரியில் நீ தூங்குங்காலத்தில் ஸ்தூலஉடலைவிட்டு வெளியேறி ஸூக்ஷ்மசரீரத்தை வைத்துக்கொண்டு உலகமுழுதும் ஸஞ்சரிக்கிறாய்.* கயிற்றால் கட்டப்பட்ட பக்ஷி அங்குமிங்கும் பறந்து திரும்ப ஸ்வஸ்தானத்தையே அடைவதுபோல, தூங்கும் காலத்தில் பிராணன் என்ற கயிற்றால் இந்த ஸ்தூல உடலுடன் கட்டப்பட்ட ஜீவனாகிய நீ வெளியேறி ஸூக்ஷ்மலோகமாகிய புவர்லோகத்தில் ஸஞ்சரிக்கிறாய்." உன்னைப்போலத் தூங்குகிறவர்கள் எத்தனையோ பேர்கள் வெளியே ஸஞ்சரிப்பவர்களை ஸந்திப்பாய். அவர்களுடன் உரையாடுவாய். விழித்துக்கொண்டிருக்கிறவர்கள் உன்னைப் பார்க்க மாட்டார்கள். திரும்பி ஸ்தூல சரீரத்தை யடைந்து நீ விழிக்கும் காலத்தில், சிலவேளைகளில் ஸூக்ஷ்ம சரீரத்துடன் ஸஞ்சரித்த காலத்தின் சில அநுபவங்கள் அந்நிலையில் பல இடங்களில் நீ பார்த்த அல்லது கேட்ட விஷயங்கள் உன்னுடைய ஸ்மரணைக்கு வரும். அதைத்தெளிவான ஸ்வப்நம் என்கிறாய். ஸுஷுப்தி அல்லது தூக்கம் என்பது சொற்பகாலம் நிகழும் மரணம் எனச் சொல்லலாம்.†

(இன்னும் வரும்.)

ப. நா-

---

* சாந்தோக்ய உபநிஷத 6-வது பிரபாடகம் 8-ம் கண்டத்தையும் பிருஹதாரண்யகம், 4-ம் அத்., 3-ம் பிராஹ்மணம், 18-ம் வாக்யத்தையும் பார்க்க.

† உறங்குவது போலும் சாக்காடுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.
குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

என்ற திருக்குறள் வாக்யங்களும்

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றன"
"உடம்பு ஈண்டொழிய உயிர் பலகாதம்
கடந்து சேட் சேறல் கனவினும் காண்குவை
ஆங்கனம் போகி யவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையில் புகுவது தெளிநீ"

என்ற மணிமேகலை வசனங்களும் இங்கு கவனிக்கத் தக்கவை.

த்ரிலோக ஸஞ்சாரியான நாரதர் ஒருகாலத்தில் தனது பிதாவான பிரஹ்மதேவரது உலகையடைந்து தந்தையை "விசேஷமேதாவது உண்டா" என்று வினவ, சதுர்முகன் நாரதரை நோக்கி, "அப்பா, நாரதா நீ முன் ஒருதடவை இங்குவந்து சென்றபின்னர் ஒரு விசேஷமான காரியம் உத்பவித்திருக்கிறது. உனக்கு ஒரு தங்கை பிறந்திருக்கிறாள்" என்றார். இதைக்கேட்ட நாரதமுனிவர் அதிக ஆச்சரியங்கொண்டு, "தாத! எனக்காவது தங்கையாவது பிறக்கவாவது அவ்விஷயத்தைக் கொஞ்சம் ஸவிஸ்தாரமாகக் கூறவேண்டும்" என்று பிரஹ்மதேவரைப் பிரார்த்தித்தார்.

பிரஹ்மதேவர்:—"நாரத! ஏதோ காரணம் பற்றி ஒரு விசேஷ பக்குவமுடைய ஜீவனிக்கர்ப்பத்தில் ஜநநமாகும்படி நேர்ந்தது. இதைத் தன் குழந்தையாக வஹிக்கக்கூடியவர்க ளிவ்வுலகங்களிலுள ரோவென்று தேடித்திரிந்து அவ்வித பாக்கியத்தையடையத்தகவ ரொருவரையும் காணாமல் கடைசியில் நானே அதை என் குழந்தையாக வரித்து, ஒவ்வொரு லோகத்தினதிகாரியையுங்கொண்டு அதற்கு அந்தந்த லோகத்திற்குரிய சரீரங்களையும் உண்டுபண்ணிக் கடைசியில் ஸ்தூல லோகத்தை யடையுங்கால் யதேச்சையாகவே பெண் சரீர மேற்பட, அதுவே இந்த ஜீவனுக்குரிய சரீரமெனக் கருதி ஸ்திரீப்ரஜையாகவே அதனை வரித்தேன். அஹல்யை என்று பெயரிட்டேன். இப்போ தவளுக்கு விவாஹகாலம் வந்துவிட்டது. இவளை யாருக்கு மணஞ்செய்து கொடுக்கிறதென்பதைக் குறித்து அநேக காலம் யோசனைசெய்தும் ஒருவழியும் புலப்படாதபடியால் கடைசியில் தியாநத்தி லமர்ந்தேன். அப்போது 'முகூர்த்தகாலத்தில் பூப்ரதக்ஷிணம்செய்து வருகிற புருஷனே அஹல்யையின் பர்த்தா' என்று உத்தரவு வர, அதன் பிரகாரமே ஸப்தலோகங்களிலேயும் பிரசுரம் செய்திருக்கிறேன். இப்போதிந்தப் பந்தயத்தி நிமித்த மநேகரிங்கே கூடுவார்கள். பந்தயத்தையும் பார்த்து உனது தங்கையின் விவாகத்தையும் நடத்தி வைத்து நீ திரும்பிப் போகலாம்" என்றார்.

இதைக் கேட்ட நாரதர் அதிக ஆச்சரியங்கொண்டு, "பந்தயமாவது, பூப்ரதக்ஷிணமாவது, ஒன்றும் நன்றாகப்புலப்படவில்லையே.

எப்படியிருந்தாலும் தியாகத்திற்கிடைத்த மொழி வீண்போகாதென்பது திண்ணம். ஏதோ என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.'' என்று நினைத்து சற்று நின்றூர். கொஞ்ச நேரத்திற்குள் இந்திரன், வாயு, யமனுகிய இம்மூன்று பேர்களும் அங்கு தோன்றினார்கள். இவ்வேழு லோகங்களி லிம்மூவரைத் தவிர வேறு யாவரு மிப்பந்தயத்துக்குத் துணியவில்லைபோலும்! இவர்களைநோக்கி அயன் மொழிந்ததாவது:"இப்போதுஉங்களை வரவழைத்ததற்குக் காரணம்யாதெனில், என்னுடைய புத்திரியாகிய அஹல்யையின் விவாககாலம் நெருங்கிவிட்டது. உங்களுள் எவன் முதலில் பூப்ரதக்ஷிணம் செய்து வருகிறானே அவனே இம்மங்கையைத் தனது பத்நியாகவடையவல்லன்.'' என உடனே அம்மூவரும் பூமியைச் சுற்றிவரப் புறப்பட்டனர்.

நடந்ததையெல்லாம் பார்வையுற்ற நாரதர் தன் மநத்திற் சமாதானமேற்படாதது கண்டு பூலோகத்தை நாடிச் சென்றூர். அங்கே கௌதம முனிவரது திவ்யாச்ரமத்தின் சமீபம் வந்து சேர்ந்தார். கௌதமரோ மஹா பெரியவர், ஸப்தரிஷிகளிலொருவர், தேவாதி தேவர்கள் வணங்கும் திருமேனியையுடையவர். எக்காலத்திலும் எல்லா அவஸ்தைகளிலும் ஜகத்துக்குழைப்பதையே தனது தர்மமாகக் கருதியவர். பரமசாந்தர், மாந்தர்க்கரிதான அநேக தவங்களைச் செய்தவர், அதிசயகுணகணங்களா லலங்கரிக்கப் பெற்றவர். இவரது ஆச்சிரமத்தின் வாயிலில் பிரஸவதருணத்திலிருமுகமாயிருக்குமொரு பசுவைக் கண்ணுற்றூர். கண்டவுடன் ''த்விமுகமாயிருக்கும் பசுவை யேழுதடவை சுற்றிவந்து நமஸ்கரித்தோர்க்கு பூப்ரதக்ஷிணம் செய்த பலனுண்டு'' என்ற வேதவாக்கியம் நாரதருடைய ஞாபகத்திற்கு வந்தது. எதிரில் கௌதமமுனியும் தோன்றினர். அவரைக்கண்டு மநமகிழ்ந்து கோதிலா வஹல்யைக்கு நாதனிவர்தானென்று மநத்தில் நிச்சயம் செய்துகொண்டு கௌதமரைத் தனது பிதாவின் சமீப மழைத்துச் சென்றூர்.

நாரதர்:—அப்பா! வேதங்கள் தங்களிடத்திலிருந்து உண்டானதாகச் சொல்கிறார்களே, அது வாஸ்தவம்தானே?

பிரஹ்மா:—அதிற் சந்தேகமென்ன?

நாரதர்:—அப்படியானு லதிற் சொல்லியிருப்பதெல்லா முண்மை தானே?

பிரஹ்மா:—ஆம், உண்மைதான்.

நாரதர்:—அப்படியானா லிக்கௌதம முனிவருக்கு அஹல்யையைப் பாணிக்கிரஹணம் செய்துகொடும்.

பிரஹ்மதேவன் சமாசாரம் யாதென்று வினவ, நாரதர் நடந்ததைக் கூறினார். கௌதமரும் "இது ஈசனது ஆக்ஞை; இதன்படி நடக்கலே முறை; இந்த ஜீவனுக்கு என்னாலாகவேண்டியது யாதேனு மிருக்கலாம். இல்லாவிட்டால் பிரஹ்மதேவரது திருவுள்ளத்திலிவ்வெண்ண முதித்திருக்காது" என்று அஹல்யையை மணம்புரிந்து அவளையுமழைத்துக்கொண்டு தமதாச்ரமம் சென்றார்.

கௌதம ஆச்சிரமத்தில் அஹல்யை ரிஷிபத்நிகளுக்குளொரு திலகம்போல் விளங்கினாள். அவ்வாச்ரமத்துள்ள விருக்ஷங்களுக்கெல்லாம் சரியான காலத்தில் தண்ணீர் வார்த்து வளர்ப்பது, மிருகங்களுக்கு ஆகாராதிகளை யளித்துப் பாதுகாப்பது, பறவைகளுக்கு நீவாரம் முதலிய தான்யங்களைக் கொடுத்து ரக்ஷிப்பதுஆகிய அநேக தர்மகாரியங்களைச் செய்தும், ஒவ்வொரு ஜீவராசியும் விகாஸமுறையில் முன்னுக்கு வரும்படியான ஏற்பாடுகளைப்பண்ணியும், இன்னும் கௌதமர் செய்யும்படியான ஜகதுபஹார காரியங்களில் தன்னாலியன்றவரையில் உதவி புரிந்தும், ஜாக்ரதவஸ்தையில் மட்டுமென்பதில்லாமல் ஸகல அவஸ்தைகளிலும் தனது பதியிடமிருந்தநேக உபதேசங்களைப் பெற்று அதற்கநுகுணமாகவேதான் நடந்துகொண்டும் வந்தாள். கௌதமரும் "இப்படிப்பட்ட ஜீவன் எனது ஸஹாயார்த்தம் கிடைத்ததே" என்கிற சந்தோஷத்துடன் அவ்வஹல்யைக்கு மோக்ஷமார்க்கத்தில் பக்குவதசையை யடைவதற்குத் தகுந்த உபதேசங்களைச் செய்து அவளைப் பாதுகாத்து வந்தார்.

யோக மார்க்கத்தி லுழைக்கின்ற ஒவ்வொரு ஜீவனையும்விட தான் மேல்நோக்கி யேகி சூக்ஷ்மலோகங்களில் சஞ்சாரம் செய்யத் தொடங்கும் சமயத்தில் அவ்வுலகங்களிலுள்ள விஷயங்களுக் கீடுபட்டுத்தானடைந்துள்ள சித்திகளை பிறர்க்குபயோகப்படுத்துவதை விட்டுத் தன்னாசையைப் பூர்த்திசெய்து கொள்வதி லுபயோகப்படுத்தத் தொடங்கிக் கெட்டுப் போகாதிருக்கும்வண்ணம் சரியானபடி மநம் தைர்யமுடையதா யிருக்கிறதாவென்பதைச் சோதித்தறியும்

படிக்கு அநேகம் பரீக்ஷைகள் ஏற்படுவது வழக்கம். இப்பரீக்ஷைகளந்தந்த ஜீவனுடைய பக்குவத்தையும் ஸ்வபாவத்தையு மொத்திருக்கும். சிலசமயங்களி லிப்பரீக்ஷைகள் வெகு கடினமாயிருக்கும். ஆனாலுண்மையை யறிந்தவர்க ளிப்பரீக்ஷைகள் கடை முறையில் நன்மையையே விளைவிக்குமெனக் கருதி மகிழ் தயங்கார்கள். வாஸ்தவத்தில் எந்த யோகிக்கு கஷ்டங்களும் பரீக்ஷைகளு மதிகமாக ஏற்படுகின்றனவோ அவனே யோகமார்க்கத்தி லதிசீக்கிரத்தில் முன்னுக்கு வருவான். துன்பங்களும் பரீக்ஷைகளும் உண்டாகாத பக்ஷத்திலுண்மையான அபிவிருத்தி யில்லையென்றே நாம் எண்ண வேண்டும். அதிவேகமாக யோகமார்க்கத்தில் அபிவிருத்தியாகிக் கொண்டுவரும் அஹல்யைக்கு சில குஹ்ய உபதேசங்கள் கொடுக்கப்படும் காலம் நெருங்கினதும், தேவேந்திரன் சபையொன்றைக் கூட்டினான். முன்னமேயேஇந்திரன்,வாயு,யமனிம்மூவரும்அஹல்யையை யடையவேண்டிச் செய்த முயற்சி பயன் படவில்லை யென்பதைப் படித்திருக்கிறோம். அப்போது முதல் தான் விரும்பிய காரியம் பயன் படாமற் போனதால் தனக்கேற்பட்ட கர்ம பந்தத்தை யொழிக்கத் தக்க சந்தர்ப்ப மொன்றை யெதிர்பார்த்திருந்த புரந்தரன் அஹல்யையின் பரிபக்குவத்தினிமித்தம் போடப்படும் பரீக்ஷையில் தானேதாவது உதவிபுரிந்து அதனால் தனக்கு முன்னேற்பட்டுள்ள கர்மபந்தத்தை யறுப்போமென்றெண்ணியே மேற்சொன்ன சபையைக் கூட்டினான். பிருஹஸ்பதி முதலிய மஹரிஷிகளும், தேவர்களும், அப்ஸர ஸ்திரீகளு மிச்சபைதனில் நிறைந்திருந்தனர். முதலில் தான் பரீக்ஷை போடுவது நியாயமா இல்லையா என்பதைப் பற்றி பரியாலோசனை செய்யலானான். கடைசியில் ரிஷிகள் சொன்னதாவது:—தேவேந்திர! அஹல்யையைப்போலொத்த ஜீவன்களுக்குப்பரீக்ஷைகள்போடுவது உனது கடமைகளிலொன்றுதான். அதற்குத் தகுந்த பதவியுமுனக்கிருக்கிறது. ஆனாலிப்போதவள் கௌதமருடைய ஆதீநத்திலிருக்கிறாள், அவளுடைய பக்குவத்தை யவர்கவனித்துவருகிறார். ஆகையா லிவ்விஷயத்தில் நீ பிரவிர்த்திப்பது நியாயமோ என்பது எங்களுக்குச் சந்தேகமாகத் தானிருக்கிறது. ஆனாலிதன் நிமித்தம் பின்னே என்ன கெடுதிவருமோ என்பதைப் பற்றி யொன்றுமிப்போதெங்களால் சொல்லமுடியாமற்போனாலும் இதனாலுனக்குமுன்னமேயே ஏற்பட்டிருக்கிற கர்மபந்த மழியுமென்றுதான் தோன்று

கிறது" என இதைக்கேள்வியுற்ற தேவாதிபன் கர்மபந்த நிவாரணார்த்தம் பரிக்ஷை போடுவதாகவே தீர்மானித்தான். பிறகு ஒரு ஜீவனுக்குள்ள குற்றம் குறைகளுக்குத் தக்கபடியல்லவோ பரிக்ஷைகள் போடவேண்டும். இவ்வஹல்யைக் கென்ன குற்றமிருக்கிறது, எவ்வித பரிக்ஷை போடுகிறது" என்பதைக்குறித் தாலோசிக்கலானான். ஒவ்வொரு குற்றத்தையும் பற்றி "இக்குறைக் கஹல்யை ஈடுபட்டவளா" என்று யோசித்துப் பார்க்குங்கால் கடையில் சில ரிஷிகள் "எவ்விதத்திற் பார்த்தாலுமிவள் குற்றமற்றவளாகவே தோன்றுகிறாள். ஆனாலெங்களுக்கொரு சந்தேகம் தோன்றுகின்றது. அங்க ஸங்க சுகாபேக்ஷை யிருக்குமோ வென்பதுதான். எங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. மற்றப்படி யவள் குற்றமற்றவளென்பதிற் கையமில்லை," என்றுரைத்தார்கள். உடனே இந்திரன் அப்ஸரஸ்திரீகளை நோக்கி, "போகாபேக்ஷை யிருக்கிறதாவென்பதைப் பற்றித்தான் பரிக்ஷை செய்யவேண்டும். வேறொருவித பரிக்ஷைக்கும் வழியில்லையென்று தோன்றுகிறது. அப்பரிக்ஷையெப்படி யெக்காலத்தி லெச்சமயத்தில் போடுகிறதென்பதைக் குறித்து நீங்கள்தான் யோசித்து வழி சொல்லத்தக்கவர்கள்," எனமொழிந்திடவே, அத்தேவஸ்திரீகளனைவரும் கலந்து யோசித்துக்கடைசியில் "தேவராஜ! எக்காலத்திலும் கௌதமமுனிவர் அஹல்யையைக் காத்துக்கொண்டே யிருக்கிறார், அதிலுமிவளண்டை நாடுவதசாத்தியமென்றே கூறலாம். முதன்முதலிவளது மநத்தைக்கலக்க ஒரே தருணம் தானிருக்கிறது. சாயங்காலம் மூன்றுமணிக்கு கௌதம ரஹல்யையைத் தனதாச்சிரமத்தின் கண் தனியே விட்டு வெளியிலேதோ காரியமாகப் போகிற வழக்கத்தை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஒருவேளையச்சமயத்தில் தங்களுக்கு சௌகரியமேற்படுமே யல்லாது வேறு ஒரு சமயமாவது சௌகரியப்படுமென்று தோன்றவில்லை," என்றிந்திரனை நோக்கிக் கூறினார்கள். தேவேந்திரனு மச்சமயமே சரியானதென்று நிச்சயம்செய்து சபையைக்கலைத்து தனது காரியசித்தியின் பொருட்டு வஸந்தகாலத்தையெதிர்பார்த்து நின்றான்.

(இன்னும் வரும்.)

R. ஸ்ரீநிவாஸ ஐயர்: M. A.

பிரஹ்மக்ஞாந தர்சநம் (பாலபாடம்.)

(67-ம் பக்கத் தொடர்ச்சி.)

3-வது அத்யாயம்.

புநர் ஜந்மம்

1. மத்திய ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள சில இருண்ட காடுகளில் விநோதமான காட்டு மனிதர்களும் ஸ்திரீகளும் இருக்கின்றார்கள். அவர்கள் கறுத்த குள்ளர்கள். அவர்களின் மநம் மலர்ந்ததாகவே தோன்றவில்லை. மநச் சக்தியற்றவர்கள். ஒருவித யோசனையும் அவர்களுக்குக் கிடையாது. ஆனால் வெகு தீவ்ரமான காமக் குரோதங்களுள்ளவர்கள்.

2. அவர்களுக்குப் பேசத்தெரியாது. ஏனென்றால் அவர்களுக்கு ஒரு பாஷையும் கிடையாது. ஆனால் அவர்கள் விநோதமாய்க் கூச்சலிட்டு ஜாடைகள் செய்வார்கள். அவர்களுடைய சப்தமானது கிரீச்சுக் குறலோடு கூடியிருப்பதால், அவர்களுக்கு சீகாரம் செய்பவர்கள் (Whistlers) என்று பெயர்.

3. அவர்கள் மானிடப் பிறவிகளாயிருந்த போதிலும் நாம் செல்வமாய்வளர்க்கின்ற அநேக பிராணிகளைவிடக் குறைந்தஅறிவும் எண்ணமும் உடையவர்கள். அவர்கள் விகாஸமுறையில் மிகவும் தாழ்ந்தபடியிலிருக்கிறார்கள். அதாவது மனிதர்களுக்காக ஏற்பட்டிருக்கிற கடவுளின் பள்ளிக்கூடத்தில் கீழான வகுப்பிலிருக்கிறார்கள்.

4. இவர்களுக்குக் கொஞ்சம் மேலானவர்கள் "ஹாட்டேண்டாட்ஸ்" என்னும் ஜாதியார்களும், ஆஸ்திரேலியா தேசத்துக் காட்டு மனிதர்களுமாம். இவர்களிற் சிலர் இரண்டுக்கு மேற்பட்ட தொகையை எண்ணத் தெரியாதவர்கள். ஒன்று, இரண்டு, அதற்கு மேற்பட்டது என்று சொல்லுவார்கள். அவர்களிற் சிலருக்கு முதல் நாள் நடந்த விஷயம் மறுநாள் அவர்களுடைய ஸ்மரணைக்கே வராது.

5. இந்த ஜநங்கள் இவ்வுலகத்தில் மநுஷ்யர்களாகவும் ஸ்திரீகளாகவும் அநேக ஜந்மங்கள் எடுக்காத ஆத்மாக்கள். இவர்கள் அநேகம் தடவை உலகத்துக்குத் திரும்பி வராததினால் சொற்ப மான பாடங்கள் தான் கற்றிருக்கிறார்கள். மானிடவர்க்கத்தில் மிகவும் கீழான சரீரங்களை உபயோகித்து வருகிறார்கள். இந்த வகுப்பினர்கள் இப்போது மிகவும் குறைந்து கொண்டுவருகிறார்கள். ஏனெனில், அவர்களில் அறிவையடைந்து தேர்ந்தவர்கள் மேல் வகுப்புக்களில் சேர்ந்து நல்ல சரீரங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

6. அவர்கள் இந்த ஜந்மத்தில் அதிகப் பிரயாசைப்பட்டுத் தங்களால் கூடியவரை கற்றுக் கொள்வார்களாகில் அடுத்த ஜந்மத்தில் நல்ல சரீரங்களைப் பெறுவார்கள். பிரபஞ்சதர்மமானது நமக்கெப்படியோ அப்படியே அவர்களுக்கும் நடைபெறுகிறது.

7. மேற்சொன்ன மனிதர்களில் ஒருவன் நம்மிடம் வந்து "நேற்றையத்திந மென்பதே கிடையாது; ஏனென்றால், அது என் ஞாபகத்துக்கு வரவில்லை. நாளையத்திநமென்பதும் இருக்கமுடியாது. அப்படி இருந்தால் எங்களிற் சிலர் அதைப்பார்த்திருக்கக் கூடும்" என்று சொல்லுவானாகில் அவனைப்பற்றி நாமென்ன நினைப்போம்? ஒரே திநத்தில் அவனுக்கு அத்தனை பெரிய சரீரம் வளர்ந்திருப்பதாக அவன் நினைப்பதைப்பற்றி அவன் முழுமூடனென்று எண்ணுவோம். இன்றைக்கு முந்தின திநத்தை யவன் பார்க்காமலும் அறியாமலும் இருந்திருப்பானேயாகில் அவனுக்குச் சொந்தமான வஸ்துக்களையும் சுற்றத்தார்களையும் சிநேகிதர்களையும் விரோதிகளையும் பார்த்த உடனே அறிந்துகொள்ளுகிறானே. இதற்கெப்படி ஸமாதாநம் சொல்லுவானென்று நாம் ஆச்சரியப்படுவோம்.

8. அவனுடைய ஞாபகத்துக்குவராத முதல்நாள் அநுபவமானது மறுநாளைக்கு வந்திருக்கிறதென்பது மிகவும் தெளிவாயிருக்கிறது. சிசுக்கள் குழந்தைகளாகவும், குழந்தைகள் மனிதர்களாகவும் ஸ்திரீகளாகவும் வளர்ந்திருப்பதை அவன் கவனியாமலிருந்தது மிகவும் ஆச்சரியமாம். ஏனெனில் குழந்தையானது ஒரே திநத்தில் மனிதனாக வளரமாட்டாது.

9. இப்போது அநேக விஷயங்களில் மஹா புத்திமான்களான ஜநங்கள் நம்மில் அநேகர் இருக்கின்றார்கள். அப்படியிருந்தும் அவர்கள் ஆஸ்திரேலியா தேசத்துக் காட்டு மனிதன் நேற்றய திநமென்பதைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தானோ அப்படியே புநர் ஜந்மத்தைப்பற்றி நினைக்கிறார்கள். பூர்வஜந்மம் தங்களுக்கு ஞாபகமில்லாததினால் அதுவே கிடையாதென்று சொல்லுகிறார்கள்.

10. புநர் ஜந்மம் இல்லை யென்று சொல்லுவது மூடத்தனமான சித்தாந்தமென்று பிரஹ்மக்ஞாந மர்ணுக்கர்களுக்குத் தெரியவரும். ஏனென்றால், அவர்கள் எந்த உபதேசத்தையும் அதற்குள்ள ருசுக்களைப் பரிசிலனைசெய்து அது உண்மையா அல்லவா என்று தெரிந்துகொண்டு அதை அங்கீகரிக்கவேண்டும்; அல்லது தள்ளிவிடவேண்டுமென்று அறிந்தவர்கள்.

11. பிரஹ்மக்ஞாந ஸபையைச்சேர்ந்த நாம் இவ்விஷயம் உண்மைதான் என்பதற்குள்ள ருசுக்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு அந்தப்படி ஒழுகவேண்டும். அது உண்மையல்லவென்று நமக்கு ஆராய்ச்சியில் தோன்றினால் அதற்குத்தக்கபடி நாம் நடக்கவேண்டும். சில விஷயங்களை நாமெப்படிப் பார்க்கிறோமோ அப்படி மற்றவர்களும் பார்க்கவில்லையென்று அவர்கள் பேரில் கோபம் கொள்ளக்கூடாது.

12. பிரஹ்மக்ஞாந ஸபையைச்சேர்ந்த நாம் எல்லாரிடத்திலும் சகிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். மூர்க்கரிடத்திலும் கூட நாம் பொறுமையுள்ளவர்களா யிருக்கவேண்டும். ஒருவருக்குத் தெளிவாயிருப்பது மற்றொருவருக்குத் தெளிவில்லாமல் இருக்குமென்பதை நாமெப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொருவருக்கும் வேண்டியது அநுபவம்தான். அதாவது அவனே நேரில் பார்த்தும் கேட்டும் உணர்ந்துமிருக்கவேண்டியது. அவ்விதம் செய்த பிற்பாடு மற்றவர்களுக்கு அநுபவத்துக்கு வராத விஷயங்களை அவர்கள் நம்பவேண்டுமென்று அவன் கட்டாயப்படுத்தமாட்டான்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குஸ்வாமி ஐயர்.

ஸங்க்ராந்தி அல்லது உத்தராயணதி.

(73-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

(7) ஏகாஷ்டகதிநமும் உத்தராயணதியும்.

(சுமார் கி. மு. 3000.)

அஷ்டகதிநத்துக்கு லக்ஷணங் கூறுமிடத்து,

ஹேமந்தசிசிரயோ:
ச்சதுர்ணாமபரபக்ஷாணாம்
அஷ்டம்யஷ்டகா:।

—ஆச்வலாயநக்ருஹ்யஸூத்ரம் II. iv. 1.

"ஹேமந்த சிசிரருதுவைச் சேர்ந்த நான்கு மாதங்களின்கிருஷ்ணபக்ஷ அஷ்டமிகளுக்கு அஷ்டகங்கள் என்று பெயர்."

என்று பொதுவாகவும்.

மாக்யா: பௌர்ணமாஸ்யா
உபரிஷ்டாத்வ்யஷ்டகா
தஸ்யாமஷ்டமீஜ்யேஷ்டயா ஸம்பத்யதே
தாமேகாஷ்டகேத்யாசக்ஷதே।

—ஆபஸ்தம்ப க்ருஹ்யஸூத்ரம் VIII. xxi. 10.

"மாகபௌர்ணமிக்குப் பிறகு வரும் அஷ்டகத்துக்கு ஏகாஷ்டகம்."

என்று விசேஷமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஸம்வத்ஸராய தீக்ஷிஷ்யமாணா ஏகாஷ்டகாயாம் தீக்ஷேரந்
ஏஷா வை ஸம்வத்ஸரஸ்ய பத்நீ யதேகாஷ்டகா
ஏதஸ்யாம் வா ஏஷ ஏதாம் ராத்ரிம் வஸதி ஸாக்ஷாதேவ ஸம்வத்ஸர
மாரப்ய * * * * * *

—தைத்திரீய ஸம்ஹிதை VII. iv. 8.

"ஸம்வத்ஸரத்திற்காக *தீக்ஷை செய்து கொள்ளுபவர்கள் ஏகாஷ்டக திநத்தில் செய்துகொள்ளவேண்டும். ஏகாஷ்டகம் ஸம்வத்ஸரத்தின் மனைவி.

---

*ஸம்வத்ஸரம் என்பது வர்ஷயாகம்.

ஸம்வத்ஸர: ப்ரஜாபதி: ப்ரஜாபதி
யஜ்ஞ:—ஐதரேயப்ராஹ்மணம் ii, 17.
ஷ, iv, 22

என்பதையுங் காண்க.

ஏனென்றால் ஸம்வத்ஸர ஆரம்பம் ஏகாஷ்டகராத்திரியில் ஏகாஷ்டகத்தோடு சேர்ந்திருப்பதால்.”

இதனுல் ஏகாஷ்டகதிநத்தில் உத்தராயணுதி ஸம்பவித்ததென்று தெரியவருகிறது.

இக்கால நிர்ணயம்:—ஏகாஷ்டகதிநமானது மாக கிருஷ்ணஷ்டமியானதால், வராஹ மிஹிரர் கால (பௌஷ்யசுக்லப் பிரதமை)த்துக்கும் இக்காலத்துக்கும் 3½ பக்ஷங்கள் வித்தியாஸமேற்படுகின்றது. அயநாதி ஒருபக்ஷம் அபஸரிப்பிதற்கு சுமார் 1000 வருஷம் வீதம் 3½ பக்ஷங்கள் அபஸரிக்க 3500 வருஷங்களாகும். அதாவது இக்காலமானது வராஹ மிஹிரர் காலத்துக்கு 3500 வருஷங்கள் முற்பட்டது. அதாவது (3500—500) = சுமார் கி. மு. 3000 வருஷம்.

(8) பங்குனி பூர்ணமியும் உத்தராயணுதியும்.
(கி. மு. 4500.)

ஃபால்குநீபௌர்ணமாஸ்யாம் தீக்ஷேரந்

முகம் வா ஏதத் ஸம்வத்ஸரஸ்ய

—தைத்திரீய ஸம்ஹிதை VII. iv. 8.

“பால்குநீ (பங்குனி) பூர்ணமியிலும் தீக்ஷை செய்யலாம், இதுவும் ஸம்வத்ஸர (முகம்) ஆரம்பமானதால்”

இதனுல் பங்குனி பௌர்ணமியும் ஒரு காலத்தில் உத்தராயணுதியாயிருந்ததென்றும், அதனுல் அத்திநத்தில் தீக்ஷைசெய்வது அநுஷ்டாநமென்றும் சொல்லப்படுகிறது.

இக்கால நிர்ணயம்:—பங்குனி பூர்ணமிக்கும் பௌஷ்ய சுக்லப்பிரதமைக்கும் 5 பக்ஷங்கள் வித்யாஸமானதால் [(5 × 1000) — 500] = கி. மு. 4500 என்று இக்காலம் நிர்ணயிக்கப்படுகின்றது. இதர ஆதாரங்கள் அடியில்வருமாறு:—

ஏஷா ஹ வை ஸம்வத்ஸரஸ்ய ப்ரதமா ராத்ரி:

யத் ஃபால்குனீ பௌர்ணமாஸீ

—சதபதப்பிராஹ்மணம் VI. ii. 2, 18.

"பங்குனி பௌர்ணமியே வர்ஷத்தின் முதல் இரவு."

முகம் வா ஏதத் ஸம்வத்ஸரஸ்ய

யத் ஃபால்குனீ பௌர்ணமாஸீ

—ஸாங்க்யாயனப்பிராஹ்மணம் iv. 4

"பங்குனி பௌர்ணமியே வருஷத்தின் (முகம்) ஆரம்பம்."

(9) சித்திரை பூர்ணமியும் உத்தராயணதியும்.

(கி. மு. சுமார் 6500.)

சித்ராபூர்ணமாஸே தீக்ஷேரந்

முகம் வா ஏதத் ஸம்வத்ஸரஸ்ய

—தைத்திரீய ஸம்ஹிதை VII. iv. 8.

"சித்திரை பூர்ணமியிலும் தீக்ஷைசெய்து கொள்ளலாம். இது வர்ஷ (முகம்) ஆரம்பமானதால்"

இதனால் சித்திரை பூர்ணமியும் ஒருகாலத்தில் உத்தராயணதியாயிருந்ததென்று குறிக்கப்பட்டிருக்கிறது.

இக்காலநிர்ணயம்:—சித்திரை பூர்ணமிக்கும், பௌஷ்ய சுக்லப்ரதமைக்கும் 7 பக்ஷங்கள் வித்யாஸமிருப்பதால்; முன்கூறிய கணக விதிப்படி [(7 × 1000) — 500] = கி. மு. சுமார் 6500 வது வருஷகாலமே, இக்காலவரையாகும்.*

---

* குறிப்பு:—மேற்கூறிய தைத்திரீயஸம்ஹிதை VII. iv.8 மந்திரத்தால், தைத்திரீய ஸம்ஹிதாகாலம், கி.மு. 2500 என்று நிர்ணயிக்கப்பட்டதுடன் அதற்குமுன் ஏகாஷ்டகதினம் (கி. மு. 3000), பங்குனி பௌர்ணமி (4500 கி. மு.), சித்திரை பௌர்ணமி (கி. மு. 6500) கள் முறையே உத்தராயணதியாய் இருந்தன வென்றும் தெரியவருகின்றது.

விஷயங்கள்.	உத்தராயணாதி.	வஸந்தவிஷு.	தக்ஷிணாயநாதி.	சரத்விஷு.	உத்தேசகாலம்.	
வராஹமிஹிரர்	270°	0°	90°	180°	500கி.பி.	ப்ருஹத்ஸம்ஹிதா, பஞ்சஸித்காந்திகை
வேதாங்கஜ்யோதிஷம்	293°.20'	23°.20'	113°.20'	203°.20'	1200கி.மு.	வித்வத்ஸ்ரீ திலகர் (orionமிருகசிர்ஷகாலம் பக்கம்38)
மாகசுக்லாதி	300°	30°	120°	210°	1500	அமரம், சுச்ருதர், அஷ்டாங்கஹிருதயம்
மஹாபாரதகாலம்	308°	38°	128°	218°	2000	மஹாபாரதம் பீஷ்மபர்வம், ஆநுசாஸநபர்வம், ப்ருஹத்ஸம்ஹிதை. தைத்திரீயப்ராஹ்மணம்
ரதஸப்தமி						அநேகமாய்மஹாபாரதகாலத்தையடுத்தது
தைத்திரீயஸம்ஹிதை	315°	45°	135°	225°	2500	தைத்திரீயஸம்ஹிதை
ஏகாஷ்டகதிநம்	323°	53°	143°	233°	3000	ஷை, ஐதரேய ப்ராஹ்மணம் ஆச்வலாயநக்ருஹ்யஸூத்ரம் ஆபஸ்தம்பக்ருஹ்யஸூத்ரம்.
பங்குனிபூர்ணமா	345°	75°	165°	235°	4500	தைத்திரீயஸம்ஹிதை
சித்திரை பூர்ணமாதி	15°	105°	195°	285°	6500	ஷை

ஓம் தத் ஸத்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

திருமந்திர ஆராய்ச்சி.

(56-ம் பக்கத் தொடர்ச்சி.)

14. இந்நூலாசிரியர் தத்வஞ்ஞானியாகையால் எல்லாவற்றிலும் நாம் தத்துவத்தையே நாடவேண்டுமென்பது அவர் உபதேசம்.

தத்துவ மெங்குண்டு தத்துவ னங்குண்டு
தத்துவ மெங்கில்லை தத்துவ னங்கில்லை
தத்துவ ஞானத்தின் றன்மை யறிந்தபின்
றத்துவ னங்கே தலைப்படுந் தானே.

ஸ்தூலமான கிரியைகள், ஸ்தூலமான புராண அர்த்தங்களைப் பாராட்டாமல் அவை குறிப்பிடும் தத்துவங்களை ஆராய்ந்து அவனவன் அந்தர்முகப்பட்டு ஞானவழியில் நடைபெறவேண்டும் என்பது அவர் உபதேசமாம். அடியிற்கண்ட பாசுரங்கள் இதை ஆதரிக்கின்றன.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே.

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னிற் றலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே.

அண்டமொ டெண்டிசை தாங்கு மதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
யுண்டது நஞ்சென் றுரைப்ப ருணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே.

அப்பணி செஞ்சடை யாதிபு ராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புர மாவது மும்மல காரிய
மப்புர மெய்தமை யாரறி வாரே.

காயக்கு ழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயென்றுந் தேடித் திரிபவர்
காயத்து னின்ற கருத்தறி யாரே.

சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவிப் பார்வை பசுமரத் தாணிபோ
லார்த்த பிறவி யகலவிட் டோடுமே.

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கண்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரிக்
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே.

மதத்துவேஷத்தை அடியிற்கண்ட பாசுரத்தினால் கண்டிக்கிறார்.

ஆன சமய மதுவிது நன்றெனு
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமி
ஞானங் கடந்த வுருவது வாமே.

16. இவர் விரிந்த மநத்தினர் என்பதை அடியில் வரும் உபதேசங்கள் விளக்குகின்றன.

ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் கால மறிமினே.

ஒன்றே குலமு மொருவனே தேவனு
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

17. யாகாதி கிருத்யங்களையும் பஹிர்முகமான பூஜைகளையும் கிரியைகளையும் இவர் முக்கியமாகக் கொண்டவ ரல்லர், யாகாதிகளைக் கண்டிக்கிறார், ஜீவகாருண்ய முடையவர் இவர். இதை ஆதரிக்கும் பாசுரங்கள் அடியில் வருமாறு:—

பற்றுய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றே ரணுக்களைக் கொல்லாமை யொண்மலர்
நற்றூர் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு
முற்றூரு மாவி யமர்ந்திட முச்சியே.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் ருற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே.

அந்நெறி யிந்நெறி யென்னுதட் டாங்கத்
தன்னெறி சென்றுசமாதியி லேநின்மி
னன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

18. இவருடைய உபமாநங்கள் மிக நலமமைந்தவைகள். அடியில்வரும் சில பாசுரங்கள் அதற்குத் திருஷ்டாந்தங்களாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது
வோவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே.

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் ஸந்நிதி யிற்சுடு மாறுபோ
லாரியன் ருேற்றமு னற்றம லங்களே.

அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்மையா
லுப்பெனப் பேர்பெற் றுருச்செய்த வவ்வுரு
வப்பினிற் கூடிய தொன்ருகு மாறுபோற்
செப்பினிச் சீவன் சிவத்து ளடங்குமே.

மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிக ளெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணு
வண்ணலு மவ்வண்ண மாகிநின் ருனே.

ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமுங்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடு
மோட்டித் துரத்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தவை கைவிட்ட வாறே.

19. இவர் பாசுரங்கள் அநேகம் உருவகமாகவும், பரிபாஷை களுடனும் நடை பெறுகின்றமையால் ஸாவதானமாகப் பொறுமையுடன் படித்து மநநம், நிதித்தியாஸநம் செய்தால் பயன்படும். இந்நூலின் கண்ணுள்ள எல்லா விஷயங்களையும் வகுத்துத் தெளிவாய்ச் சொல்லுதல் ஸாத்தியமான விஷயமன்று. வேத ஆகம உபநிஷத்துக்களை நன்றாய் ஆராய்ந்த வித்வத் ஸம்பத் பெற்ற மஹாபுருஷன் ஒருவர் அவதரித்தால் அவர் ஒருகால் எடுத்துக் காட்டக்கூடியது. பிறர் ஆங்காங்கு உள்ள சில விஷயங்களை மாத்திரம் எடுத்து விவரிக்கலாம். பூர்ணமாக விவரித்தல் முடியாததாம்.

20. இந்நூலை அருளிச்செய்த மஹாநுபாவரின் இயற்பெயர், பிறந்த இடம், காலம், ஜாதி, இருந்த காலம், தேசம், வியக்தமாகத் தெரியவரவில்லை. பசுக்களின்மேல் உண்டானகருணையால், மூலன் என்ற ஒரு இடையன் சரீரத்தில் இம்மஹா புருஷன் பரகாயப்பிரவேசம் செய்ததினால் திருமூலர் என்ற நாமத்தால் இந்நாட்டில் வழங்கப் பெறுவாராயினர். இந்த இடையன் சரீரத்திலிருந்துகொண்டே இந்த ஞாந நூல் நமக்கு அருளப்பட்டமையால் இந்தத்திருமேனிக்கு கௌரவம் பாராட்டுவது நியாயந்தானே. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக இவர் கொண்டாடப் பெறுகின்றார். இவரைப்பற்றி ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அடியில் வருமாறு பிரஸ்தாபித்திருக்கிறார்.

"நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்"

ஔவையார் இவருடைய நூலைப்பற்றி அடியில் வரும் வெண்பாவில் பிரஸ்தாபிக்கிறார்.

> தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்.

மேற்கண்ட பாசுரங்களினால் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடையவும், ஔவையாருடையவும் காலத்திற்கு முன்னர் இவர் இருந்திருக்கலாமென்று ஊகிக்கத்தக்கது. ஔவையார் திருக்குறளாசிரியர் திருவள்ளுவனாரின் ஸஹோதரியாவர். ஆகவே திருமூலர் திருவள்ளுவநாயனார் காலத்திற்கு முற்பட்டவராவர்.

ஓம் தத் ஸத்

மாதவன்.

துகாராம் பாவாவின் சரித்திரம்.

(62-ம் பக்கத்தொடர்ச்சி.)

வருகிறவழியில் எவன் மூட்டையாவது கநத்தால் இவர்கையில் கொடுப்பான். யார் எதைக் கொடுத்தாலும், சுவாமி கொடுக்க வேண்டும் என்றே வாங்கிக் கொண்டுவந்து சேர்ப்பார். கொண்டு வருகையில் தான் என்ன சிரமப்பட்டாலும் அதைக் காட்டிக் கொடுக்கமாட்டார். விட்டோபாவின் பெயரைச் சொல்லிக்கொண்டே ஆநந்தமாய் நடந்து போவார். இவ்விதமாக இவரிடம் வேலை வாங்குவார்கள். இவரும் அதைச் சந்தோஷமாகச் செய்வார். இதற்குக்காரணம் என்னவெனின், சகலத்திலும் விட்டோபா இருக்கிறார், எந்த வேலையும் அவருக்காகச் செய்யப்படுகிறது, அவருடைய வேலையைச் செய்தால் அவருக்குச் சந்தோஷமா யிருக்கும் என்கிற நிச்சயம் இவருக்கு வெகு திடமாயிருந்தது.

இவ்விதமாக பிராணிகளுக்குச் சரீரம் உபயோகப்பட்டால் தான் ஸார்த்தகம் என்று அவருக்குத் தோன்றியிருந்தது. சாதுக்களைக் கண்டால் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வேண்டிய கைங்கரியங்களைச் செய்யத் தயாராயிருப்பார். ஸத்ஸேவையைவிட ஸுஹிருதம் வேறில்லை என்பது அவருடைய நிச்சயம். சாதுக்கள் விட்டல் பஜனையைச் செய்யும்போது அவர்களின் காலில் கல் முதலியது குத்தக்கூடாது என்று இடத்தை யெல்லாம் தன் கையால் சுத்தம் செய்வார். அவர்கள் கீர்த்தநங்களைப் பாடும்போது அவர்கள் வெளியே விட்டிருக்கும் பாதரக்ஷைகளைப் பார்த்துக்கொண்டு வெளியே யிருந்தபடி கீர்த்தனங்களைக் கேட்பார். அக்காலத்தில் தீவர்த்தியைப் பிடிக்க ஆள் இல்லாவிட்டால் தானே பிடிப்பார். சில சமயங்களில் அவர்களுக்குப் பின் நின்று பாடுவார். வெய்யில் காலங்களில் எல்லாருக்கும் விசிறி போடுவார். துளசிமாலை பூமாலை இவைகளைத் தயார் செய்து அவர்கள் கழுத்தில் மாட்டுவார். அவர்களுக்கு வேண்டிய சாமான்களைச் சேகரம் செய்து கொடுப்பார். கைகால் பிடித்துச் சுகம் உண்டாகும்படி செய்வார். சாதுக்கள் எவ்வளவு கஷ்டமான வேலையைச் சொன்னாலும் சந்தோஷமாய்ச்

செய்வார். எவனைச் சந்தித்தாலும் மிகுந்த ஆதரவாகப் பேசுவார்.

எவனுவது எதையாவது கேட்டால் இல்லை என்று சொல்ல மாட்டார். அது அநாவசியம் என்று தோன்றினுலும் அதைக் கவனிக்க மாட்டார். ஒருதரம் அவலாபாயி அம்மாள் பழைய புடவையை மடித்து வைத்துவிட்டு ஸ்நாநத்திற்குப் போனுள். அப்போது துகாராம் வெளியே நாமஸ்மரணை செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு ஏழைப் பெண்பிள்ளை அவரிடம் வந்து ஒருபழைய வஸ்திரம் இருந்தால் கொடுக்கவேண்டு மென்று கேட்டாள். அவர் தன் ஸம்ஸாரம் வைத்திருந்த வஸ்திரத்தைக்கொண்டு வந்து கொடுத்து சீக்கிரமாய் அந்தவிடம் விட்டுப் போகும்படி சொன்னுர். அவள் அவரை ஆசிர்வதித்துப் போய்விட்டாள். துகாராமரும் அந்த இடத்தைவிட்டு இந்திரியாணி தீரத்தில் போய் உட்கார்ந்தார். அவலாயி அம்மாள் ஸ்நாநம்செய்து வந்து பார்த்தாலோ வஸ்திரமில்லை. யாராவது திருடிக்கொண்டு போயிருக்கலா மென்று அவளுக்கு முதலில் தோன்றிற்று. பிறகு, ஒரு அம்மாள் தன் பர்த்தாவிடம் வஸ்திரம் கேட்டுக் கொண்டிருந்தாள், அவளுக்குத் தான் கொடுத்திருக்கவேண்டும் என்று தெரிய வந்தது. வீட்டில் வேறு வஸ்திரமிராதபடியால் ஈரத்துணியையே அந்த அம்மாள் கட்டிக் கொள்ளும்படி நேரிட்டது. அக்காலத்தில் பந்துக்கள் வீட்டில் கலியாணம் ஏற்பட்டு இவளை அழைக்க ஜநங்கள் வந்து இவளைக் கூட வெளியே வரும்படி கூப்பிட்டார்கள். அப்போது அவலாயி அம்மாள் வெகு வருத்த மடைந்து புருஷனை அதிகமாய் தூஷித்தாள், அன்று முழுமையும் துகாராம் வீட்டுக்கு வரவில்லை. அந்த அம்மாள் சமையல் செய்த பிறகு தான் நேரில் ஆகாரத்தை அவருக்குக் கொண்டு போகாமல் பெண்ணிடம் கொடுத்து அனுப்பினுள். இவ்விதமாக துகாராமருக்கு தான் பிறர் என்கிற பாவனை விட்டுப்போகவே அவலாயி அம்மாளுக்கு அடிக்கடி மநோவியாகுலம் உண்டாக இடமாயிற்று. அந்த அம்மாள் நெல்குத்தியும் மாவரைத்தும் ஆகாரத்துக்கு அரிசிசம்பாதித்து வைத்திருந்தால் துகாராம் சாதுக்களைவீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்து விடு

வார். பசி என்று யார் வந்தாலும் தன்னுடைய ஜநங்கள் பட்டினி என்பதைக் கவனிக்காமலே வந்தவர்களின் பசியைத்தீர்ப்பார், பசியால் வருந்துகிறவனைக் கண்ணால் பார்க்க ஸஹிக்கமாட்டார்.

இவ்விதமாக அவர் மனிதர்களிடம் மாத்திரம் தயாளுவாக இருந்தார் என்பதில்லை. பசு பக்ஷி மிருகாதிகள் சகலத்தினிடத்திலும் வெகு கிருபையுடன் இருந்தார். பசு பக்ஷிகளுக்கு தாங்கங்களைப் போடுவார். புழு முதலியவைகளுக்கு மாவைத் தூவுவார். நடக்கும் பொழுது காலின் கீழ் எந்தப் பிராணியாவது இருக்கும் என்ற பயத்தால் வெகு மிருதுவாய் நடப்பார். நடந்து போகும் போது கொசுக்கள் மேல் வந்து உட்கார்ந்தால் அவைகளை ஓட்டாமல் நிற்பார். வழியில் போகிறவர்களுக்கு கிட்ட நெருங்க தைர்யம் இராது, தெரிந்தவன் யாராவது வந்தால் அவைகளை ஓட்டி இவரை விலக்கி விடுவான். இப்படி இந்த ஸாதுசிரோமணி ஸகல பிராணிகளுக்கும் வேண்டியவரானர். ஒரு காலத்தில் ஒரு இடத்தில் சில பக்ஷிகள் தான்னியம் தின்று கொண்டிருக்கையில் துகாராம் அவ்விடம் போனர். அவரைக் கண்டு அவைகள் பயந்தோடிப்போயின. அதைக் கண்டு அவர் வெகு வருத்தமடைந்து தன்னைக் கண்டு இவைகள் பயந்து ஒடினது நன்ருக இல்லை என்று மநதில் நினைத்து அவர் அவ்விடத்தில் அசையாமல் உட்கார்ந்தார். அந்த பக்ஷிகள் மறுபடியும் வந்து பயமின்றி தான்னியங்களைத் தின்கிறவரையில் அசைகிறதில்லை என்று நிச்சயம் செய்தார். கொஞ்ச காலம் சென்ற பிறகு அந்தப் பக்ஷிகள் அங்கும் இங்கும் ஓடி கல் போல் உட்கார்ந்ததையும் சுத்தமாய் அசையாததையும் கண்டு யாதொரு யோசனையின்றி அவர் பேரிலேயே வந்து உட்கார்ந்தன.

இவைகளை நாம் பார்க்கும்போது சாதுலக்ஷணங்கள் அவரிடம் எவ்வளவு இருந்தன வென்பது நன்ருய்த் தெரியவரும்.

(இன்னும் வரும்.)

A. சிவராவ்,

ஏழைப்பெண்களின் பண்டு:—பால்யத்தில் விதவைகளாகும் ஸ்திரீகளுக்கு கல்வி கற்பித்துக் கொடுத்து பெண்பள்ளிக்கூடங்களுக்கு உபாத்தினிகளாகவும், பிரஸவகாலங்களில் உதவிபுரியும்படியாக மருத்துவஸ்திரீகளாகவும், தையல், சித்திரம் எழுதல் முதலிய யாதேனும் ஒரு கைத்தொழில் கற்றுக்கொடுத்து தாங்கள் மானமாய் காலக்ஷேபம் செய்பவர்களாகவும் உதவிசெய்விக்கும்படி ஸ்திரீகள் கூடி ஒரு ஸபை 1912 ஏப்ரல் மீ௴த்தில் சென்னை எழும்பூரில் ஸ்தாபித்திருக்கிறார்கள். அச்சபையின் காரியாதிகளைக் கொண்டுசெலுத்துகிறவர்கள் இரண்டு பிராஹ்மண ஸ்திரீகள் ஆவார்கள். ஸகோதரி R. S. சுப்பலக்ஷ்மியம்மாள் B. A. ஸ்ரீமதி வி. பத்தம்மாள் இவர்கள் பலர்களுடைய உதவியால், சொற்ப திரவியம் சேகரித்திருக் கிறார்கள். சென்ற வருஷம் செலவுபோக இப்போது கையிருப்பில் ரூ 1595 இருக்கிறது. கவர்ன்மெண்டார் பிராஹ்மண விதவைகளின் கல்வி அபிவிருத்தி முறையை உத்தேசித்து, அவர்கள் வஸதி, படிப்பு முதலியவைகளுக்கு ஒரு (Brahmin Widows' Hostel) பிராஹ்மண விதவைகளின் தங்கும் இடம்ஒன்றை எழும்பூரில்ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பெரிய உதவியால் ஸ்திரீகளின்பண்டு ஏற்படுத்திய ஸபையாரின் நோக்கம் இன்னும் பிரபலமாகும் என்பதில் சந்தேகமில்லை. பலதுறைகளில் ஸ்திரீகள் இக்கால நாகரிகத்திற்கு ஏற்ப பல தொழில்கள் கற்றுக்கொண்டு ஜனங்களுக்கு எத்தனையோ நலங்களைச்செய்யலாம். அதற்கு இன்னும் ஏராளமான திரவிய சகாயம் வேண்டுவது. நம்மவர்கள் இதற்கு முன் வந்து உதவி புரிவார்களாக. ஸ்திரீகள் செய்யக்கூடிய கைங்கர்யங்கள் பல உள. இப்போது அவசியமாக அடியிற்கண்ட தொழிலாளிகள் ஸ்திரீகளாக இருந்தால் நன்மையாக இருக்கும். (1) பள்ளிக்கூடத்து உபாத்தினிகள் (2) குழந்தைகளுக்கும், ஸ்திரீகளுக்கும் வைத்தியர் (3) பிரஸவகாலத்தில் மருத்துவம் செய்பவர்கள் (4)புராணாதிகளை படனம் செய்பவர்கள் (5) தையல் முதலிய வேலைகள் (6) சித்திரம் எழுதல், பூஜார்ஹமான விக்கிரகங்களைச் செய்தல் இவை போன்றவை. திரவியசகாயம் செய்பவர், "சென்னை எழும்பூர், ஹைரோட்,3-38-வீட்டிலிருக்கும் சகோதரி R.S. சுப்பலக்ஷ்மி அம்மாள், B. A." என்ற விலாசத்திற்கு அனுப்பலாம்.

நத்தை:--இஃது ஓர் அற்புதமான ஜந்து. இதற்கு இருதயம் சுவாஸப்பை, இரைப்பை முதலிய கருவிகள் உண்டு. சாதாரணகாலத்தில் வெளியினின்று காற்றை உட்கொள்ளும். அதிகப் பனிக்காலத்தில், அவயவங்கள் யாதொ

றையும் கூட்டுக்குள் இழுத்துக்கொண்டு கூட்டு முகத்துவாரத்தை பளபளப்பான ஒருவகைப் பிசினுல் காற்றுக்கூட உள்ளே புகாமல் நன்றாய் மூடிக் கொள்ளும். காற்றில்லாமல் சிலகாலம் ஜீவிக்கும்.

இருமுதல் உள்ள செடி:- பூச்சி புழுக்களை உண்ணும் செடிகள், சிரிக்கும் செடிகள், அழும் செடிகள், தூங்கும் செடிகள் இவைகளைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். பிரான்சு தேசத்தின் ஒரு ஔஷதி சாஸ்திரியார், இருமுகிற செடியைக் கண்டுபிடித்திருக்கிறார். அதின் இலைகளின் மேல் தாளிகள் படியவும், அவ்விலைகளின் கண்ணுள்ள சிறு காற்றுக் குழாய்களுள் (Air Chambers) ஆவிகள் (Gases) நிறைகின்றன. அக்குழாய்கள் பெருக்கின்றன. பின்பு பெருக்கின்ற குழாய்கள் சிறுக்கின்றன. இப்போது முன் நிறைந்த ஆவிகள் இருமல் போன்ற சப்தத்துடன் வெளியேறுகின்றன.

சீனதேசத்தில் புது லிபி ஏற்பாடு:-- பிரகிருதத்தில் சீனபாஷையின் நெடுங்கணக்கு 8000 தனி அக்ஷரங்களை உடையது. இதனுல் அந்தப் பாஷையைக் கற்கும் குழந்தைகள் படும் கஷ்டம் இத்தன்மையானதென்று நம்மால் சொல்லமுடியாது. அந்தத் தேசம் இப்போது பல மாற்றங்கள் பெற்று வருகின்றது. முன் ராஜாதிபத்தியம் நடைபெற்றது. இப்போது பிரஜாதிபத்தியம் (Republic) ஏற்பட்டு நடைபெறுகிறது. முன்னர் அத்தேசத்தின் ஸ்திரீகள் பாதங்களை பலவந்தமாகக் கட்டி குறைத்து ஊனப் படுத்தி வந்தார்கள். அது நாகரிகமாகக் கருதப்பட்டது. இப்போது அந்த வழக்கம் நின்றுவிட்டது. இப்போது; அந்தத் தேசத்தின் பாஷையின் நெடுங்கணக்கின் சீர்திருத்தம் சீக்கிரம் முடிவுபெறும்போலத் தோன்றுகிறது. 8000 எழுத்துக்களை, 42 எழுத்துக்குள் அடக்க முயற்சிக்கப் படுகிறது. அந்த 42 அக்ஷரங்களில், 23 உயிரெழுத்துக்கள், 19 மெய்யெழுத்துக்களாகும். உயிரெழுத்துக்களில் 4 கிரீக் பாஷையினின்றும், 4 ருஷ்யன் பாஷையினின்றும், 5 லத்தீன் பாஷையினின்றும், 1 சீனபாஷையினின்றும், 9 நூதனமாய்ச் சிருஷ்டிபெற்றும் இருக்கின்றனவென்றும் தெரியவருகின்றது. நந்தேசத்திலும் ஒரே லிபி இருக்கவேண்டுமென்று நடத்தப் படும்முயற்சி எப்போது கைவல்யமாகுமோ அறிகிலம்.

பத்திராதிபர்.